03.05.2016

தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## நிலக்கடலை குவிண்டாலுக்கு ரூ.1,000 உயர்வு

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் குவிண்டாலுக்கு ரூ.1,000 வரை விலை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற ஏலத்தில் 486 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன. குவிண்டாலுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.5,510 முதல் 5,700 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.5,260 முதல் ரூ.5,440 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,900 முதல் ரூ.5,150 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

கடந்த வாரத்தை விட நிலக்கடலை விலை குவிண்டாலுக்கு ரூ.1,000 வரை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விளைபொருள் உற்பத்தியைப் பெருக்க:தொழில்நுட்பப் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும்

வேளாண் விளைபொருள் உற்பத்தியைப் பெருக்க தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரிக்கவேண்டும் என இஸ்ரோ முன்னாள் தலைவரும், விஞ்ஞானியுமான கஸ்தூரிரங்கன் தெரிவித்தார்.

பெங்களூரில் அண்மையில் நடைபெற்ற பெங்களூரு வேளாண் பல்கலைக்கழகத்தின் 50-ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் பேசியது: இந்தியாவில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கி, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டியது அவசியமாகும். வேளாண் விளைபொருள்

உற்பத்தியைப் பெருக்குவதற்கு நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும்.

அறிவியல் ரீதியான விவசாய முறைகளைக் கையாள வேண்டும். வேளாண் கருவிகளின் விலை விவசாயிகளால் கொள்முதல் செய்யத்தக்கதாக இருக்க வேண்டும்.

இந்தியாவின் விவசாயத் துறை 370 பில்லியன் டாலர் அளவுக்கு பொருளாதார நடவடிக்கைகளைக் கொண்டதாக இருந்தாலும் வேளாண் விளைபொருள் உற்பத்திக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது மிகவும் குறைவாகும். விண்வெளி, உயிரி, தகவல் தொழில்நுட்பங்களை விவசாயப் பணிகளுக்கு வெகுவாகப் பயன்படுத்த வேண்டும்.

மத்திய, மாநில அரசுகளின் பட்ஜெட்டில் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குறைந்த செலவு, அதிக உற்பத்தி, குறைந்த முதலீடு, அதிக வளர்ச்சி என்ற கொள்கையை பிரதமர் மோடி அறிவித்திருக்கிறார். இந்த கொள்கையை விவசாயிகள் அவசியம் பின்பற்ற வேண்டும். குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி அதிகளவில் விளைச்சலைப் பெறவும் விவசாயிகள் முனைப்போடு செயல்பட வேண்டும்.

வானிலையால் நமக்கு பல்வேறு பிரச்னைகள் உள்ளன. எனவே, விவசாயிகளுக்குப் பயன்படும் வகையிலான தகவல்களை வழங்குவதற்காக இஸ்ரோ புதிய செயற்கைக் கோள்களை வடிவமைத்து விண்ணில் செலுத்தியுள்ளது. எதிர்காலத்தில் அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் நாடுகளுடன் இணைந்து விவசாயிகளுக்கு பயன்படும் பல திட்டங்களை வகுக்க இஸ்ரோ திட்டமிட்டுள்ளது என்றார்.

விழாவில், ஆளுநரும், பல்கலைக்கழக வேந்தருமான வஜுபாய்வாலா பங்கேற்று, முதுநிலை பட்டப்படிப்பில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் வழங்கி, 921 மாணவர்களுக்கு பட்டங்களை அளித்தார். நிகழ்ச்சியில், விவசாயத் துறை அமைச்சர் கிருஷ்ணபைரே கௌடா, பல்கலைக்கழக துணை வேந்தர் எச்.சிவண்ணா, பதிவாளர் எம்.பி.ராஜேகௌடா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கால்நடைகளுக்கு ஊசி போடும் பயிற்சி: விண்ணப்பிக்க அழைப்பு

ஈரோடு: ஈரோடு, வீரப்பன்சத்திரத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பயிற்சி ஒரு மாதம் நடக்க உள்ளது. இதில் பங்கேற்க, எஸ்.எஸ்.எல்.சி., தேர்ச்சி பெற்றவர்கள், 25 முதல், 45 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். மத்திய அரசின் நிதியுதவியுடன் பயிற்சி வழங்கப்பட உள்ளது. மையத்தில் விண்ணப்பம் பெற்று, விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வழங்க வேண்டும். விண்ணப்பத்துடன், போட்டோ, எஸ்.எஸ்.எல்.சி., தேர்ச்சி பெற்றமைக்கான மதிப்பெண் சான்று, ரேஷன் கார்டு, ஆதார் அடையாள அட்டையின் நகல் இணைக்கப்பட வேண்டும். தகுதி அடிப்படையில், பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படுவர். கூடுதல் விவரம் பெற, 0424-2291482 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## வறட்சி எதிரொலி: தேயிலை தூள் உற்பத்தி பாதிப்பு

குன்னூர்: நீலகிரியில் தொடரும் கடும் வறட்சியின் காரணமாக, 25 சதவீதம் தேயிலை தூள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

நீலகிரியில், 70 ஆயிரத்து 266 ஏக்கர் பரப்பில், 40 ஆயிரம் சிறு விவசாயிகள், தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். 97 எஸ்டேட் நிறுவனங்கள் மூலம், 39 ஆயிரத்து 682 ஏக்கரில் தேயிலை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு பறிக்கப்படும் பசுந்தேயிலை, 169 தேயிலை தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு, தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகிறது.

பனிப்பொழிவு பாதிப்பு

கடந்த, நவம்பர், டிசம்பர் மாதங்களில், பனிப்பொழிவு காணப்பட்டது. இதன் பிறகு தொடர்ந்த மேகமூட்டம் காரணமாக, தேயிலை செடிகளை கொப்பள நோய் தாக்கியது.

இந்த கால கட்டங்களில், பசுந்தேயிலை வரத்தும் குறைந்து, தேயிலை தொழிற்சாலைகளில், 50 சதவீதம் வரை உற்பத்தி பாதிக்கப்பட்டது. தற்காலிக தொழிலாளர்களுக்கும் வேலை இழப்பு ஏற்பட்டது.

வறட்சியால் குறைவு

கடந்த, பிப்ரவரி மாத துவக்கத்தில், இடையிடையே குறிப்பிட்ட சில நாட்களில் மழை பெய்ததால், பிப்ரவரி மாதம் இறுதியில் நல்ல மகசூல் கிடைக்கும் என்ற சூழ்நிலை இருந்தது. ஆனால், மழையின் தாக்கம் குறைந்து கடும் வறட்சி நிலவி வருகிறது. இதனால், தேயிலை உற்பத்தியும் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

தூள் உற்பத்தியில் வீழ்ச்சி

சர்வதேச மேலாண்மையியல் ஆலோசகர் சுந்தர் கூறியதாவது:

நீலகிரியில் தொடரும் வறட்சி காரணமாகவும், சிவப்பு சிலந்தி தாக்குதல் காரணமாகவும், தேயிலை தூள் உற்பத்தியில் கடந்த, 2015ல் காலாண்டை ஒப்பிடுகையில், நடப்பாண்டில், உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில், 12.6 லட்சம் கிலோ தேயிலை தூள் உற்பத்தியான நிலையில், நடப்பாண்டில், 10.1 லட்சம் கிலோ தேயிலை தூள் மட்டுமே உற்பத்தியாகியுள்ளது. இதன் மூலம், 25 சதவீதம் உற்பத்தி குறைந்துள்ளது. இதே நிலை தொடர்ந்தால், மேலும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இவ்வாறு சுந்தர் கூறினார்.

**குன்னூரில் பிளம்ஸ் உற்பத்தியில் சுணக்கம்**

குன்னூர்: குன்னூர் பழப்பண்ணையில் பிளம்ஸ் பழ உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

குன்னூர் சிம்ஸ்பூங்கா அருகே, 25 ஏக்கர் பரப்பளவில் பழப்பண்ணை உள்ளது. கடந்த, 1920ல் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் துவங்கப்பட்ட இப்பண்ணையில், பிளம்ஸ், பீச், பெர்சிமன், லிச்சி, லக்கோட், பேசன் ப்ரூட், எலுமிச்சை, மாதுளை, பேரிக்காய், ஆரஞ்ச், ஊட்டி ஆப்பிள், சீத்தா உள்ளிட்ட, 20 வகையான பழ மரங்கள் உள்ளன.

இங்கு விளை விக்கப்படும் பெரும்பாலான பழங்களை கொண்டு 'ஜாம்' மற்றும் பழ ரசங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில், கடந்த இரண்டு மாதங்களாக நிலவும் வறட்சியின் காரணமாக, பழ உற்பத்தி மிகுந்த பாதிப்பை சந்தித்துள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில்,

100 கிலோ வரை பிளம்ஸ் உற்பத்தியான நிலையில், நடப்பாண்டில் இதுவரை

சில மரங்களில் மட்டுமே, பிளம்ஸ் காய்த் துள்ளது.

தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணியிடம் கேட்ட போது,“தட்பவெப்பம் மாற்றம் காரணமாக, இந்த ஆண்டு பழ உற்பத்தி இதுவரை இல்லை. ஓரளவு தண்ணீர் பாய்ச்சிய பின்பும், இம் முறை உற்பத்தி குறைவாகவே உள்ளது,” என்றார்.

**மேய்ச்சலுக்கு விட வழியில்லை: கால்நடை வளர்ப்போர் தவிப்பு**

கடவூர்: தரகம்பட்டியில், கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட வழியின்றி எங்கு செல்வது என்று தெரியாமல் பசுமாட்டை கையில் பிடித்துக் கொண்டு ரோட்டில் முதியவர் அலைந்தது பரிதாபமாக இருந்தது.

கடவூர் பஞ்சாயத்து யூனியன் கரூர் மாவட்டத்தின் கடைக்கோடியில் அமைந்துள்ளது. ஆனால், தரகம்பட்டி டவுன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகள், மற்றும் ஏமூர், உப்பிடமங்லம் பகுதிகள் கட்டாந்தரையாகவே காட்சியளிக்கிறது.

இதுகுறித்து தரகம்பட்டியைச் சேர்ந்த கோவிந்தராஜ், 65, கூறியதாவது: கடவூர் தரகம்பட்டி சுற்றுப்பகுதியில் கிணற்றுப்பாசனமும் பொய்த்துப் போனதால், சிறிதளவு செய்யும் விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதியில் ஆடு, மாடு வளர்ப்பவர்கள் மேய்ச்சலுக்கு விட முடியாமல் பரிதவிக்கின்றனர். என்ன தான் தீவனம் போட்டாலும், ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டால் தான் அதற்கு போதுமான தீவனம் கிடைக்கும். வானம் பார்த்த பூமியாகவும், கட்டாந்தரையாகவும் கிடப்பதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு சிலர் அவரவர் நிலங்களில் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை வளர்த்தும் பயனில்லை. கடும் வெயில் காரணமாக அவையும் கருகி வருகின்றன. தீவனமும் இல்லாமல், மேய்ச்சலுக்கு எங்கு கொண்டு செல்வது என்று தெரியாமல் கால்நடைகளை வைத்துக் கொண்டு பரிதவித்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## நீர்வரத்து இன்றி குறைகிறது அணைகளின் நீர்மட்டம்

கூடலூார்: கோடை மழைபெய்யாததால் நீர் வரத்து இன்றி முல்லைப் பெரியாறு அணை மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

கோடைமழையின்றி அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. 142 அடி உயரம் கொண்ட முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் நேற்று காலை 110.30 அடியாக இருந்தது. நீர்வரத்து இல்லை. தமிழகப்பகுதிக்கு மட்டும் வினாடிக்கு 100 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 959 மில்லியன் கன அடியாகும்.

*71 அடி உயரம் கொண்ட வைகை அணை நீர்மட்டம் 31.43 அடியாக இருந்தது. நீர்வரத்து இல்லை. நீர் திறப்பு 60 கன அடி. நீர் இருப்பு 429 மில்லியன் கன அடியாக இருந்தது.

*57 அடி உயரம் கொண்ட மஞ்சளாறு அணையின் நீர்மட்டம்

33.50 அடி. நீர்வரத்து மற்றும் நீர்திறப்பு இல்லை. நீர் இருப்பு 109.93 மில்லியன் கன அடி.

*126 அடி உயரம் கொண்ட சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 85.60 அடியாகும். நீர்வரத்து இல்லை.

நீர்திறப்பு 3 கன அடி. நீர் இருப்பு 44.58 மில்லியன் கன அடி. மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளிலும் நீர்வரத்து இன்றி, நீர்மட்டம் குறைந்து வருகிறது. கோடைமழையை எதிர்பார்த்து மக்கள் உள்ளனர்.

## கர்நாடகா அணைகளில் நீர்மட்டம் கடும் சரிவு: மேட்டூர் அணை நீர்திறப்பு தாமதமாக வாய்ப்பு

மேட்டூர்: கர்நாடகா அணைகளின் நீர்மட்டம் கடுமையாக சரிந்துள்ளதால், தொடர்ந்து, ஐந்து ஆண்டுகளாக மேட்டூர் அணையில் இருந்து, குறுவை சாகுபடிக்கு ஜூன், 12ல் நீர்திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் அணை மொத்த நீர்மட்டம், 120 அடி. கொள்ளளவு, 93.470 டி.எம்.சி., ஆண்டுதோறும் ஜூன், 12ல் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா குறுவை சாகுபடிக்கு நீர்திறக்கப்படும். இதன் மூலம், டெல்டாவில், 4 லட்சம் ஏக்கரில் குறுவை, தொடர்ந்து, 12.5 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்படும். கடந்த, 2011ல் அணை நீர்மட்டம், 115 அடியாக இருந்ததால், ஆறு நாட்களுக்கு முன்பாக, ஜூன் 6ம் தேதி பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டது. அதன் பின்பு கடந்த நான்கு ஆண்டுகளாக, மேட்டூர் அணை நீர்மட்டம் குறைவாக இருந்ததால் குறித்தபடி ஜூன், 12ல் நீர்திறக்காமல் தாமதமாக, ஆகஸ்ட், செப்டம்பர் மாதம் திறக்கப்பட்டது.

தாமத நீர்திறப்பால், நான்கு ஆண்டுகள் டெல்டாவில், 12 லட்சம் முதல் 14 லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி பாதித்தது. நடப்பாண்டில் வரும் ஜூன், 12ல் டெல்டா பாசனத்துக்கு நீர்திறக்க மேட்டூர் அணையில் குறைந்தபட்சம், 90 அடிக்கு மேல் நீர் இருக்க வேண்டும். நேற்று அணை நீர்மட்டம், 50.96 அடியாக மட்டுமே இருந்தது. கர்நாடகா ஆண்டுதோறும் தமிழகத்துக்கு, 192 டி.எம்.சி., நீர் வழங்க வேண்டும். ஆனால்,

நடப்பாண்டு காவிரி நீர்பிடிப்பு பகுதியில் கடும் வறட்சி நீடிப்பதால், கர்நாடகா அணைகளின் நீர் இருப்பும் கடுமையாக சரிந்துள்ளது. நேற்று கர்நாடகாவின் கே.ஆர்.எஸ்., அணையில், 10.5 டி.எம்.சி., கபினியில், 4 டி.எம்.சி., ஹேரங்கியில், 1 டி.எம்.சி., ஹேமாவதியில், 4.5 டி.எம்.சி., என, மொத்தம், நான்கு அணைகளிலும் தற்போது, 20 டி.எம்.சி., நீர் மட்டுமே உள்ளது. தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து கர்நாடகா அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து, பின்னர் மேட்டூர் அணைக்கு நீர்திறக்க காலதாமதமாகும். இதனால், தொடர்ந்து, ஐந்தாவது ஆண்டாக, நடப்பாண்டிலும், மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு தாமதமாக நீர்திறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**கர்நாடகா அணைகள் நிலவரம்**

அணைகள் மொத்த கொள்ளளவு தற்போது நீர் இருப்பு

கே.ஆர்.எஸ்., அணை, 49.5 டி.எம்.சி., 10.5 டி.எம்.சி.,

கபினி அணை 19.5 டி.எம்.சி., 4 டி.எம்.சி.,

ஹேரங்கி 8.5 டிஎம்.சி., 1 டி.எம்.சி.,

ஹேமாவதி 37 டி.எம்.சி., 4.5 டி.எம்.சி.,

**மேட்டூர் அணையில் ஜூன்12ல் நீர் இருப்பு**

ஆண்டு நீர்மட்டம் நீர் இருப்பு டெல்டாவுக்கு நீர் திறப்பு

2012 79.26 அடி 41.22 டி.எம்.சி., செப்.17

2013 17.12 அடி 3.49 டி.எம்.சி., ஆக.,2

2014 44.40 அடி 14.46 டி.எம்.சி., ஆக.,10

2015 74.21 அடி 36.42 டி.எம்.சி., ஆக.,9

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தர்மபுரியில் இருந்து வெளிமாநிலங்களுக்கு செல்லும் நேந்திரம் சிப்ஸ்**

தர்மபுரி : தர்மபுரி மாவட்டம் சோகத்தூர் அருகே, நேந்திரம் சிப்ஸ் தயாரிக்கும் பணி குடிசை தொழிலாக நடந்து வருகிறது. தேங்காய் எண்ணெயில் பொறித்து எடுக்கும் வாசம் அப்பகுதியையே மணமணக்க வைக்கிறது. இங்கு வாழைக்காயை பிரித்து எடுக்கும் பணியில் 6 பேரும், பொறிக்க 2 பேரும், பேக்கிங்கிற்கு 4 பேருமாக சுமார் 15 பேர் வரை பணியாற்றி வருகின்றனர். தினமும் 350 கிலோ நேந்திரம் சிப்ஸ் உற்பத்தி செய்யப்பட்டு ஆந்திரா கர்நாடகா மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதுபற்றி சிப்ஸ் தயாரிக்கும் உற்பத்தியாளர் கூறுகையில், 'நேந்திர வாழையை சீசனுக்கு தகுந்தார் போல் நாகர்கோயில் அருகே வள்ளியூர், கோயமுத்தூர் போன்ற இடங்களில் இருந்து வாங்கி வருகிறோம்.

கால்வாசி பழம் பதத்திலேயே நேந்திரம் பழத்தை பிரித்து எடுத்துவிடுவோம். சிப்ஸ் வில்லையாக்குவதற்கென பிரத்யேக மிஷின் வைத்துள்ளோம். அதில் பழத்தை போட்டால் நேரடியாக எண்ணெய் கொப்பரைக்குள் சிப்ஸ் விழுந்துவிடும். முந்திரி கொட்டை கழிவுகள் மூலம் தீ மூட்டி சிப்ஸ் தயாரிக்கிறோம். நாளொன்றுக்கு 350 கிலோ சிப்ஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. எங்களது வீட்டு ஆட்களே அனைத்து வேலைகளையும் செய்கிறோம். ஒரு கிலோ ரூ.200க்கு மொத்த விலைக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கிறோம். தர்மபுரியில் இருந்து ஆந்திரா மாநிலம் ஹைதராபாத், கர்நாடக மாநிலம், பெங்களூரு, மைசூரு போன்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது' என்றார்.

## சேவூரில் ரூ.10 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், ; அவிநாசி அருகே சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ.10 லட்சத்துக்கு ஏலம் நேற்று நடைபெற்றது. இந்த வாரம் நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில், குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.5,510 முதல் ரூ.5,700 வரையிலும், இரண்டாவது ரகம் குவிண்டால் ரூ.5,260 முதல் ரூ.5,440 வரையிலும், மூன்றாவது ரகம் குவிண்டால் ரூ.4,900 முதல் ரூ.5,250 வரையிலும் ஏலம் போனது. சென்ற வாரத்தைவிட நிலக்கடலை வரத்து குறைந்திருந்தது. புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசவலையபாளையம் பகுதிகளில் இருந்து 160 விவசாயிகளும், மணப்பாறை, ஈரோடு, திருச்செங்கோடு பகுதிகளில் இருந்து 5 வியாபாரிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

## எலுமிச்சை பழம் விற்பனையில் 3 மடங்கு லாபம் ஈட்டும் வியாபாரிகள்

திருச்சி, : திருச்சி காந்தி மார்க்கெட்டில் மொத்த விலையில் நல்ல திரட்சியான ஒரு எலுமிச்சை பழம் ரூ.2.50க்கு விற்பனை செய்யும் நிலையில், கோடையை காரணம் காட்டி வெளிமார்க்கெட்டில் ஒரு பழம் ரூ.7 முதல் 10 வரைக்கும் விற்பனை செய்து வியாபாரிகள் கொள்ளை

லாபம் சம்பாதிக்கின்றனர். தமிழகம் முழுவதும் வெயிலின் தாக்கம் அதிகளவு உள்ளது. வழக்கமாக கோடை காலத்தில் எலுமிச்சை, சாத்துக்குடி, ஆரஞ்ச், திராட்சை போன்ற குளிர்ச்சி தரும் பழங்களின் விற்பனை அதிகரிக்கும். சமீப காலமாக சாதாரணமாக ரூ.1க்கு விற்பனையாகும் எலுமிச்சை பழத்தை தற்போதைய கோடை சீஸனை பயன்படுத்தி ரூ.7 முதல் ரூ.10 வரைக்கும் வெளி மார்க்கெட்டில் வியபாரிகள் விற்பனை செய்து அதிக அளவில் லாபம் சம்பாதிக்கின்றனர்.

திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு நாள் தோறும் 200 மூட்டை எலுமிச்சை பழம் வருகிறது. துறையூர், சேலம், மணப்பாறை, சமயபுரம், திண்டுக்கல் ஆகிய பகுதிகளிலிருந்து திருச்சி காந்திமார்க்கெட்டுக்கு எலுமிச்சை பழம் கொண்டு வரப்படுகிறது. மொத்த விலையில் ஒரு பழம் ரூ.1, முதல் மிக அதிகபட்சமாக ரூ.2.50க்கு விற்கப்படுகிறது. ஆனால் வெளி மார்க்கெட்டில், அதாவது குறிப்பாக குடியிருப்பு பகுதிகளில் உள்ள மளிகை மற்றும் ஸ்டோர் கடைகளில் ஒரு பழம் ரூ.8 முதல் ரூ.10 வரை விற்கப்படுகிறது. வியபாரிகளிடம் கேட்டால், ‘வரத்து குறைவாக இருக்கிறது. கோடை சீஸன் என்பதால் நுகர்வு அதிகரித்துவிட்டது. பழத்தின் விலையும் அதிகமாக உள்ளது’ எனக்கூறி மக்களிடம் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர்.

இதுகுறித்து காந்தி மார்க்கெட் எலுமிச்சை மொத்த வியபாரி பாபு கூறுகையில், மொத்த விலையில் எலுமிச்சை எப்போதும் குறைவாகத் தான் இருக்கும். இப்போது காய்க்கும் சீசன் தான். சித்திரை மாதம் என்பதால் அம்மன் கோயில்களில் விசேஷம், கோடை சீசன் நுகர்வால் சற்று வரத்துக்கும், நுகர்வுக்குமான இடைவேளை இருக்கலாம். ஆனால் இவ்வளவு அதிகம் இல்லை. அதிகபட்சம் ரூ.5க்கு நல்ல திரட்சியான பழம் வெளி மார்க்கெட்டில் வாங்கலாம். ரூ.10 என்பது மிக அதிகம். மொத்த விலையிலேயே ரூ.1 முதல் ரூ.2.50 வரை தான் நாங்களே இங்கு விற்கிறோம் என்றார்.

**சித்திரை பட்டத்தில் உளுந்து, பச்சைப்பயிரில் அதிக மகசூலுக்கு களை நிர்வாகம், விதை நேர்த்தி அவசியம்**

நாகை : நாகை சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய அதிகாரிகள் தெரிவித்திருப்பதாவது: வம்பன் ரகம் நோய் எதிர்ப்புத்திறன் உடையது. மானாவாரி மற்றும் இறவைக்கு ஏற்றது. இந்த ரகம் ஒரு ஏக்கருக்கு 340 கிலோ மகசூல் தர கூடியது. பச்சைப்பயிர் சாகுபடியில் காலம் காலமாக மாவட்ட விவசாயிகள் நாட்டு ரக பயிர்களையே சித்திரை பட்டத்தில் பயிரிட்டு வந்துள்ளனர். இதற்கு மாற்றாக கோ 8 என்ற குறுகிய கால ரகத்தை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிமுகம் செய்துள்ளது.

இந்த குறுகிய கால ரகம் 55 முதல் 60 நாள் வயதுடையது. ஒரே மாதிரியான முதிர்ச்சி அடையும் தன்மை உடையது. மேலும் மஞ்சள் தேமல் நோய், தண்டு கருகல் நோய்க்கு எதிர்ப்பு தன்மையுடையது. ஒரு ஏக்கருக்கு 340 கிலோ மகசூல் தர கூடியது. குறிப்பாக இயந்திர அறுவடைக்கு மிகவும் ஏற்றது. விவசாயிகள் தகுந்த ரகத்தை தேர்வு செய்த பிறகு விதை நேர்த்தி செய்வது மிகவும் அவசியம். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கொடெர்மா விரிடி அல்லது சூடோமோனஸ் புளோரோசன்ஸ் 10 கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் ஒரு கிலோ விதையுடன் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும்.

பூச்சி தாக்குதலில் இருந்து பயிர்களை காக்க கவ்சவ்வு 5 மி.லி.யை ஒரு கிலோ விதையுடன் கலந்து நிழலில் உலர வைத்து விதைக்கலாம். ரைசோபியம் பாக்டீரியாக்களை பூசன மருந்து கலந்த விதையுடன் கலக்க கூடாது. ட்ரைக்கோடெர்மா அல்லது சூடோமோனஸ் கலந்த விதையுடன் பயனுள்ள பாக்டீரியாக்களை கலந்து விதைக்கலாம். உளுந்து மற்றும் பச்சைப்பயிரை ஒரு ஏக்கருக்கு 8 கிலோ வீதம் விதைக்க வேண்டும்.

களை முளைப்பதற்கு முன் களைக்கொல்லியான பென்டிமெத்தலின் ஹெக்டருக்கு 2 லிட்டரை விதைத்த 3ம் நாளில் தட்டை விசிறி நுண்குழல் கொண்ட நேப்சாக் அல்லது ராக்கர் தெளிப்பானில் 600 லிட்டர் நீரில்

கலந்து தெளிக்க வேண்டும். பின்னர் 20வது நாளில் ஒரு முறை கைகளை எடுக்க வேண்டும். அல்லது களை முளைத்த பின்னர் தெளிக்கும் களைக்கொல்லியான குயிசல்பாப் இதை ஹெக்டருக்கு 1000 மி.லி. (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவில்) விதைத்த 15 முதல் 20 நாளில் தெளிக்க வேண்டும். மேற்கண்ட தொழில் நுட்ப ஆலோசனைகளை பின்பற்றி அதிக மகசூல் பெற்று பயன்பெறும்படி நாகை சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அனுராதா, உதவி பேராசிரியர் முனைவர் ரவி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: சீனி, துவரை விலை குறைந்தது உளுந்து விலை உயர்வு



விருதுநகர்,

விருதுநகர் மார்க்கெட்டில் சீனி, துவரை ஆகியவற்றின் விலை குறைந்துள்ள நிலையில் உளுந்து விலை உயர்ந்துள்ளது.

உளுந்து

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடைக்கு ரூ.100 விலை உயர்ந்து ரூ.7,600 முதல் ரூ.9,600 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.10,700 முதல் ரூ.11,600 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.7,600 முதல் ரூ.10,600 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.200 விலை குறைந்து ரூ.9,300 முதல் ரூ.10,300 வரையிலும், துவரம் பருப்பு ரூ.12,800 முதல் ரூ.13,800 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடைக்கு ரூ.7,800 முதல் ரூ.8,300 வரையிலும், பாசிபருப்பு 100 கிலோ மூடைக்கு ரூ.8,400 முதல் ரூ.9,100 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

மல்லி லயன் ரகம் 40 கிலோ மூடைக்கு ரூ.3,500 முதல் ரூ.4,000 வரை விற்பனை ஆனது. வத்தல் (குவிண்டாலுக்கு) சம்பா ரகம் ரூ.10,000 முதல் ரூ.11,000 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.10,500 முதல் ரூ.12,000 வரையிலும், முண்டு வத்தல் குவிண்டாலுக்கு ரூ.8,500 முதல் ரூ.9,500 வரையிலும் விலை சொல்லப்பட்டது.

கடலை எண்ணெய்

விருதுநகர் எண்ணெய் மார்க்கெட்டில் கடலை எண்ணெய் 15 கிலோவுக்கு ரூ.1,950 ஆகவும், தேங்காய் எண்ணெய் ரூ.1,605 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் ரூ.1,350 ஆகவும் விற்பனை ஆனது. நிலக்கடலை பருப்பு 80 கிலோ மூடைக்கு ரூ.5,900 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ மூடைக்கு ரூ.4,400 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,210 ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோவுக்கு ரூ.1025 ஆகவும், நல்லெண்ணெய் 15 கிலோ ரூ.2,890 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது.

சீனி

விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்கு ரூ.20 விலை குறைந்து ரூ.3,940 ஆகவும், கொண்டைக் கடலை குவிண்டாலுக்கு ரூ.6,000 ஆகவும், பொரிகடலை 55 கிலோவுக்கு ரூ.4,210 ஆகவும்,

பட்டாணி 100 கிலோ ரூ.2,850 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,650 வரையிலும், மசூர் பருப்பு ரூ.8,200 முதல் ரூ.8,300 வரையிலும், ரவை 90 கிலோவுக்கு ரூ.3,215 ஆகவும், மைதா முதல் ரகம் 90 கிலோ ரூ.10 விலை உயர்ந்து ரூ.3,025 ஆகவும், 2–வது ரகம் 2195 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. ஆட்டா 50 கிலோ ரூ.1085 ஆகவும் விற்பனை ஆனது.

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.9,750 ஆகவும், ஏ ரகம் ரூ.12,750 ஆகவும், சி ரகம் ரூ.8,000 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.6,300 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.5,800 ஆகவும் விற்பனை ஆனது.